தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-10-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## கொத்தமல்லி பயிரிட்டு இலாபம் பெறலாம்

இந்தியாவில் பயிரிடப்படும் நறுமணப் பயிர்களில் கொத்தமல்லி ஒரு முக்கிய விதை நறுமணப் பயிராகும். இந்திய வேளாண் அமைச்சகத்தின் முன்னறிவிப்பு அறிக்கை மதிப்பீடு 2014-15ஆம் ஆண்டில் 3.4 இலட்சம் டன்கள் கொத்தமல்லி உற்பத்தியாகும் எனக் கணித்தது. இது கடந்தாண்டு மொத்த கொத்தமல்லி உற்பத்தியை விட 10 சதவீதம் அதிகமாகும். இராஜஸ்தான், மத்தியபிரதேசம், ஒரிசா, தமிழ்நாடு மற்றும் உத்திரபிரதேசம் ஆகியவை கொத்தமல்லி சாகுபடி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். இந்தியாவிலிருந்து, கொத்தமல்லி தூள் மற்றும் எண்ணெய் வடிவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், 2013-14ல் கொத்தமல்லி விதை 7527 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு 2614 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில், தூத்துக்குடி மாவட்டம் (2237 எக்டர்) கொத்தமல்லி சாகுபடியில் முதலிடம் வகிக்கிறது. கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகியவை கொத்தமல்லி பயரிடும் பிற முக்கிய மாவட்டங்களாகும். தமிழ்நாட்டில் 90 சதவீதம் கொத்தமல்லி மானாவாரியாக பயிரிடப்படுகிறது.

தற்போது விருதுநகர் சந்தையில் கொத்தமல்லி குவிண்டாலுக்கு ரூ.11,500 வரை விற்கப்படுகிறது. வர்த்தக மூலங்களின் படி, இராஜஸ்தானிலிருந்து வரத்து வரும் பிப்ரவரி–மார்ச், 2016ல் எதிர்பார்க்கப்படும் புதிய வரத்து கொத்தமல்லி விலையில் மாற்றத்தை ஏற்படுத்தும். இருப்பினும் தமிழ்நாட்டில் பயிராகும் கொத்தமல்லிக்கு தரத்தின் காரணமாகஅதிக விலை கிடைக்கும்.

விவசாயிகள், கொத்தமல்லி விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், விருதுநகர் சந்தையில் நிலவிய விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக பொருளாதார ஆய்வுகளின் அடிப்படையில் தற்சமயம் நடவு செய்யும் கொத்தமல்லிக்கு வரும் 2016ம் வருடம் பிப்ரவரி–மார்ச் மாத அறுவடையின் போது குவிண்டாலுக்கு ரூ.9,000 – 9,500 வரை கிடைக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் விவசாயிகள் நடவு முடிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி - 0422-2431405

**<u>மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசைன மற்றும் நறுமணப் பொருட்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி- 0422-6611284

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்